# "இனிமேல் பயப்பட வேண்டாம்" (18:1–11)

*நீங்கள் எப்பொழுதாவது பயப்பட்டதுண்டா? நாம் எல்லாரும் நமது வாழ்க்கையில் சில வேளைகளில் பயப்படு கின்றோம், நம்மில் சிலர் அடிக்கடி பயப்படுகிறவர்களாய் இருக்கின்றோம். பள்ளி மாணவர்கள் பரீட்சையில் தோல்வி யடைந்து விடுவோமோ என்று பயப்படுகிறார்கள். வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் தங்களுக்கு வேலையில்லாமல் போய் விடுமோ என்று பயப்படுகின்றார்கள். புதிதாய்த் திருமணம் செய்து கொண்டவர்கள் தங்கள் அன்பின் வலிமை குறைந்து விடுமோ என்று பயப்படுகின்றார்கள். மாற்ற முடியாத கடந்த காலத்தின் இரகசியங்கள், காயப்படுத்தும் நிகழ்காலத்தின் பாதுகாப்பில்லாமைகள், அறியப்படாத எதிர்காலத்தின் நிச்சயமில்லாத தன்மை ஆகியவற்றால் ஆயிரக்கணக்கான வர்கள் பயம் நிறைந்தவர்கள் ஆகின்றார்கள்.*

*பயம் என்பது மனித நிலைமையின் ஒரு பகுதியாகும். இதை நீங்கள் சந்தேகப்பட்டால், வேதாகமத்தில் "பயம்" மற்றும் "அச்சம்" என்ற வார்த்தையைப் பாருங்கள். ஆதியாகமத்தில் மட்டும் பார்த்தால் கூட, ஒருவேளை இல்லாவிட்டாலும் மற்றொரு வேளையில் ஒவ்வொரு முக்கிய பாத்திரங்களும் பயம் அடைந்தார்கள்: ஆதாம், ஆபிரகாம், சாராள், லோத்து, ஈசாக்கு, யாக்கோபு, யாக்கோபின் மகன்கள் (ஆதி. 3:10; 15:1; 18:15; 19:30; 20:11; 26:7; 31:31; 43:18). ஆயினும் நான், பயப்படுதல் என்பது இயல்பானதாக இருந்தாலும், பயத்தி லேயே வாழ்வது இயல்பானதல்ல என்பதை இவ்விடத்தில் கூடுதலாகக் கூற வேண்டியதாய் இருக்கின்றது.*

*நம்முடைய இப்பாடத்தில், வெல்லப்பட முடியாத*

அப்போஸ்தலனாகிய பவுல், பயத்தில் மூழ்கியதை நாம் காண்போம். அத்துடன், அந்த பயத்தை வெற்றி கொள்ளக் கர்த்தர் அவருக்கு எவ்விதம் உதவினார் - மற்றும் நாம் பயத்தைப் புறம்பே தள்ளக் கர்த்தர் நமக்கு எவ்விதம் உதவ முடியும் என்பதையும் நாம் காண்போம்.

பவுல், உலகத்தின் கல்வி மற்றும் கலாச்சாரத்தின் மைய மான அத்தேனே பட்டணத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். பின்வரும் தகவலுடன் பதினெட்டாம் அதிகாரம் தொடங்குகின்றது: "அதன்பின்பு பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு, கொரிந்து பட்டணத்துக்கு வந்து:"[1] மேற்கில் சுமார் நாற்பது மைல்கள் தூரத்திலேயே கொரிந்து பட்டணம் இருந்தது, ஆனால் பவுல் இன்னொரு நாட்டிற்குப் போவதாய் இருந்திருக்கலாம், அத்தேனே என்பது ஒரு சிறிய பல்கலைக் கழக நகரம் ஆகும்; கொரிந்து பட்டணமோ உலக வர்த்தக மையங்களில் ஒன்றாக இருந்தது. அத்தேனியர்கள் அறிவுக் கூர்மையுடன் இரகசிய சூழ்ச்சியில் ஈடுபட்டார்கள்; கொரிந்தியர்களோ மாம்ச இச்சைகளினால் கவரப்பட்டார்கள். சத்தியத்தைத் தேடுவதாக அத்தேனியர்கள் உரிமை கோரினார்கள். சந்தோஷத்தைச் சற்றும் வெட்கப்படாமல் கொரிந்தியர்கள் தேடி ஓடினார்கள்.

## பவுலுக்கு ஒரு பிரச்சனை இருந்தது (18:1, 9)

அப். 18:1-8ல் நாம், கொரிந்து பட்டணத்தில் பவுலின் தொடக்க கால ஊழியத்தைப் பற்றி வாசிக்கும் போது, வெற்றிக்குப் பின் வெற்றி தொடர்ந்ததாகத் தோன்றுகின்றது. பவுல் சந்தோஷம் நிறைந்தவராகவும், தன்னம்பிக்கை வழிந்தோடுபவராகவும் இருந்தார் என்று நாம் கருதலாம். ஆகையால், வசனம் 9ல் பின்வரும் செய்தியுடன் கர்த்தர் பவுலுக்குத் தரிசனமானது பற்றி வாசிக்கையில் அது நம்மை ஆச்சரியப்படுத்துகின்றது: "நீ பயப்படாமல் பேசு." "பயப்படாமல்?" "ஆனால் அவர் பயந்தார் என்று நாம் அறியவில்லையே!" என்று நாம் அலறுகின்றோம். ஆயினும் சுறுசுறுப்பான மாநகரமான கொரிந்துவில் பவுல் நுழைந்த போது,

பயத்தினாலும் நம்பிக்கையின்மையினாலும் பீடிக்கப்பட்டார் என்பதே உண்மையாகும்.

பவுலின் நிருபத்தில் இருந்து இதை நாம் அறிகின்றோம். கொரிந்துவில் பவுலின் பிரசங்க ஊழியத்தின் போதே, அவர் தமது எழுத்து ஊழியத்தையும் ஊக்கத்துடன் தொடங்கினார்.[2] இவ்விதமாக லூக்கா தரும் விபரங்களுக்குத் துணையாக, அவைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதாக நாம் பவுலின் நிருபங்களைப் பெற்றுள்ளோம். கொரிந்தியருக்குப் பவுல் எழுதிய நிருபத்தில், அவர் தாம் அந்த நகருக்குள் வரும்போது தமக்கு இருந்த மனநிலையைப் பற்றிக் கூறினார்:

> சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப் போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை ... அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன் (1 கொரி. 2:1, 3).

பவுல் ஏன் ''பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும்'' கொரிந்து நகரத்திற்கு வந்தார்? பவுலின் சூழ்நிலை மற்றும் மனிதனின் ஆவி ஆகியவை பற்றிச் சற்று அறிந்துள்ள நிலையில் நாம் கற்றறிந்த யூகங்கள் சிலவற்றை மேற்கொள்ள முடியும்.

**கலக்கமுள்ள கடந்த காலம்**

நம்மில் பலர் செய்வது போலவே, பவுலும் தமது கடந்த காலத் தொடர்பான நிகழ்ச்சிகள் தமது மனதை அரித்துத் தின்ன அனுமதித்திருக்க வேண்டும். அத்தேனே பட்டணத்தில் மிகச் சிறு எண்ணிக்கையில் கிடைத்த பதில்செயலானது அவரது மனதைக் கலங்கப் பண்ணியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் அத்தேனேயில் மிகக் குறுகிய காலம் தங்கிப் பின் அங்கிருந்து - அவசியத்தினால் அல்ல ஆனால் விருப்பத்தினா லேயே - அவர் வெளியேறினார். (கிரேக்க நாட்டிலேயே அத்தேனே பட்டணம்தான் அவர் வலிந்து துரத்தி விடப்படாத முதல் நகரம் ஆகும்!). அத்தேனியத் தத்துவ ஞானிகளிடத்தில் தாம் மிகச் சிறிய அளவிலேயே நன்மை செய்ய முடிந்தது பற்றி

அவர் நினைத்தார் என்பது மிகவும் தெளிவானது.

மேலும், பிலிப்பி, தெசலோனிக்கே மற்றும் பெரோயா பட்டணங்களில் தாம் நிலைநாட்டியிருந்த புத்திளம் சபைகளின் நெருக்கடி அவரது மனதில் பாரமாயிருந்தது (2 கொரி. 11:28). மிகக் குறிப்பாக அவர் தமது உயிரைக் காத்துக் கொள்ளும்படியாக வெளியேறியிருந்த தெசலோனிக்கே நகரத்தில் இருந்த புதிய கிறிஸ்தவர்களைப் பற்றி அவர் மிகவும் கவலையாயிருந்தார். ''சோதனைக்காரன் [அவர்களை] சோதனை குட்படுத்தியதினால்'' தமது வேலை வீணாய்ப் போனதோ என்று அவர் பயந்திருந்தார் (1 தெச. 3:5).

**உறுதியில்லாத ஒரு நிகழ்காலம்**

நாம் அடிக்கடி செய்வது போலவே, பவுலும் தமது நிகழ்காலச் சூழ்நிலைகள் தம்மைக் கீழே தள்ள அனுமதித்திருக்க வேண்டும். அவருடைய சொந்த சூழ்நிலையானது உற்சாக மூட்டுவதாகவே இல்லை. அவர் இன்னமும் தனிமையாகவே இருந்தார். அவர் வேண்டிக் கேட்டுக் கொண்டபடி சீலாவும் தீமோத்தேயுவும் அத்தேனே பட்டணத்தில் அவருடன் சேர்ந்து கொண்டிருந்தால், அவர் அவர்களை உடனடியாக மக்கெதோனியாவுக்குத் திருப்பி அனுப்பி விட்டார். இவ்விதமாக அவர், சுமார் ஐந்து லட்சம் மக்கள் வாழும் ஒரு நகரத்தில் ஒரு அந்நியராகத் தனித்து இருந்தார்! மேலும், பவுல் பணமில்லாதவராகக் கொரிந்துவுக்குள் வந்திருப்பார். மேலும், மருத்துவர் லூக்கா தம்முடன் இல்லாத நிலையில் பவுல் கொரிந்துவுக்குள் வந்தபோது வியாதியடைந்திருக்கவும் வாய்ப்புண்டு (1 கொரி. 2:3ல் உள்ள "பலவீனத்தோடும்" என்ற வார்த்தை அவரது உடல் நிலையைக் குறிப்பதாய் இருக்கக் கூடும்). 2 கொரிந்தியர் 12:7ல் பவுல் தமது "மாம்சத்திலே ஒரு முள்" என்பதைக் கொரிந்தியர்கள் அறிந்திருந்தது போலப் பேசினார். தனிமை உணர்வானது ஏழ்மை மற்றும் வியாதி ஆகியவற்றுடன் கூட்டு சேர்ந்து வரும் போது அது மிகப் பலமான இருதயத்தைக் கூட பயத்தினால் நிறைத்து விடக்கூடும்.

கொரிந்து பட்டணத்தினாலேயே பவுல் சற்று பயமுறுத்தப் பட்டிருக்கவும் வாய்ப்பிருந்தது. அந்த நகரம் பெரியதாகவும், செல்வம் மிக்கதாகவும், அதன் முக்கிய பண்புகள் வரையிலும்

கூட சீரழிந்திருந்ததாகவும் காணப்பட்டது. வர்த்தகத்தைப் பொறுத்தமட்டில் கொரிந்து நகரம் மிகச் சிறந்த இடத்தில் இருந்தது. பெலொப்பொன்னேஸியன் தீபகற்பத்தை கிரேக்க நாட்டின் மற்ற பகுதியுடன் இணைக்கும் குறுகிய நில இடுக்கின்[3] மேல் பகுதியில் அது இருந்தது. "அவ்விடத்தில் கடலானது கிரேக்க நாட்டை ஏறக்குறைய இரண்டாக வகிர்ந்தது" என்று Avon Malone கூறினார். கிழக்கு மேற்காகச் செல்லும் எல்லாப் போக்குவரத்துகளும் கொரிந்துவின் மூலமாகவே வரவேண்டியிருந்தது. மேலும், வடக்கு-தெற்கு வர்த்தகங்கள் எல்லாம் கூட அபாயமான கடற்பயண நிலைகளினால் கொரிந்துவுக்கு வருவது கட்டாயமாயிற்று. தீபகற்பத்தின் முனையில் மலேயியா என்ற முனையிடத்தில் கொந்தளிக்கும் தண்ணீர் இருந்தது. கடலோடிகள் ஒரு பழமொழி கூறுவதுண்டு: "மலேயியாவுக்குக் கடற்பயணம் செய்ய நினைப்பவர், அவர் தம்முடைய உயில் எழுதி வைக்கட்டும்." புயலடிக்கும் மலேயியாவைச் சுற்றி வரும் இருநூறு மைல்கள் பயணத்தைத் தவிர்ப்பதற்காக, ரோமா புரியில் இருந்து வரும் பல கப்பல்கள் லெகாயீம் (கொரிந்து விற்கு வடக்கில் உள்ளது) என்ற இடத்திற்குப் போவது வழக்கம்; அங்கு அவர்கள் சரக்குகளை இறக்கி, மறுபடியும் வண்டியில் ஏற்றி சில மைல்கள் அந்த நில இடுக்கில் பயணம் செய்து, கெங்கிரேயா(கொரிந்துவின் கிழக்குப் பகுதி)வின் துறைமுகத்திற்குக் கொண்டு சென்று, அங்கிருந்து சரக்குகள் வேறொரு கப்பலில் ஏற்றப்படும். (சிறிய கப்பல்கள் முழுமை யாகச் சரக்கேற்றப்பட்ட நிலையில், விசேஷமான ஒரு மரச் சாலையில் அந்த நில இடுக்கின் குறுக்கே இழுத்துச் செல்லப் பட்டதும் உண்டு!)[4] இவ்விதமாக, கொரிந்து பட்டணத்தில் உலக வர்த்தகமே பாய்ந்து ஓடியது!

இருப்பினும், கொரிந்துவின் வர்த்தக நிறுவனங்கள் உலகப் புகழ் பெற்றவை அல்ல. மாறாக, உலகத்தாரின் கண்ணோட்டத் தில், ஒருவர் "நல்ல பொழுது போக்கிற்காக" அல்லது "நல்ல நேரம் பெறுவதற்காக" அங்கு செல்லலாம் என்ற வகையில் அது புகழ் பெற்றிருந்தது. நகரத்தின் கோபுரமாயிருந்த பகுதி Acro-Corinth (1886 அடி உயரமானது ஆகும்), இது அன்பின் தேவதையான அப்ரோடைட்டின் (ரோமர்களால் வீனஸ் என

அழைக்கப்பட்ட தேவதை) கோவிலினால் முடி சூட்டப் பட்டிருந்தது. இந்தக் கோவிலில் ஊழியம் செய்த ஓராயிரம் பெண் குருக்கள் (அதாவது சமய மரபு சார்ந்த விலைமாதர்கள்), இரவு வேளைகளில் மலைப்பகுதியில் இருந்து இறங்கி நகரத்தின் தெருக்களுக்கு வந்து தங்கள் தொழிலை நடத்து வதுண்டு என்று உலக வரலாற்றாளர்கள் கூறுகின்றார்கள் (1 கொரி. 6:15, 16அ, 18அ). அந்த நாட்களின் மொழி வழக்கில் ஐயத்திற்கிடமான வித்தியாசப் பண்பைத் தருவதில் கொரிந்து முன்னணி வகித்தது: “கொரிந்தியம் செய்தல்” (Corinthianize) என்றால் வேசித்தனம் செய்தல் என்றானது; “கொரிந்தியப் பெண்” என்றால் விலைமாது. பதினேழாம் நூற்றாண்டிலும் கூட, ஷேக்ஸ்பியர் “கொரிந்தியன்” என்ற ஒருவனை குடிகார முரடனாக சித்தரித்தார்.

பவுல் கொரிந்து பட்டணத்தின் புலன் இன்பம், விக்கிர காராதனை, மற்றும் புத்திக் கூர்மையான முரட்டுத்தனம் ஆகியவற்றைக் கண்டபோது கலக்கம் அடைந்திருக்க வேண்டும். பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபத்தில் அந்நகரின் பயமுறுத்தும் சவால்கள் காணப்பட முடியும்:

> அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப தில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக் காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக் காரரும், திருடரும், பொருளாசைக் காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும், தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள். ...” (1 கொரி. 6:9-11).

ஆவிக்குரிய நிலையில் ஒரு தரிசு நிலமாக அத்தேனே பட்டணம் விளங்கியதென்றால், கொரிந்து பட்டணமானது சூரிய வெய்யில் காய்ந்து வறுக்கும் ஒரு பாலைவனமாக இருந்தது.

நம்மில் பலர், பவுலோடும் நம்மை அடையாளப்படுத்திக் கொள்ள முடியும். நமது வாழ்வில் சில வேளைகளில், நாமும் கூட சாத்தியமற்றதென்று காணப்படும் சவால்களைச் சந்தித்திருக்கின்றோம். ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரத்தை, சிட்னி துறைமுகப் பாலத்தில் உள்ள கிராதியின்

*முனையில் இருந்து நான் கண்ணோக்கிப் பார்த்து, ஊழியக் காரர்களின் ஒரு சிறு குழுவானது அவ்வளவு பெரிய நகரத்தில் என்ன விளைவை ஏற்படுத்திவிட முடியும் என்று வியப் படைந்து நின்றதை நான் இன்னமும் நினைவு கூர முடிகின்றது.*

**வரவேற்பற்ற சம்பவிக்கக் கூடிய தன்மை**

*நிறைவாக, பெரும்பாலும் நம்மைப் போலவே, பவுலும் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதில் கவலையாய் இருந்திருக்க வேண்டும். கொரிந்து நகரத்தின் வர்த்தக வெற்றியானது ஏராளமான யூதர்களின் எதிர்பார்ப்பைக் கவர்ந்திழுத்திருந்தது. அங்கு பவுல் தமது ஊழியத்தைத் தொடங்குவதற்கு ஏதுவாக ஒரு ஜெப ஆலயம் இருந்திருக்கும் என்பது இதன் அர்த்தமாகும், ஆனால் அதே வேளையில், அங்கு ஏதோ ஒரு மூலையில் இடர்பாடும் இருந்தது என்பதும் இதன் அர்த்தமாகும். பவுலின் ஊழியத்தில் அடிப்படை முன்மாதிரி ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது: (1) ஆரம்பத்தில் அவர் வெற்றி பெறுதல் (2) பலத்த எதிர்ப்பு எழும்புதல் (3) அவர் தவறாய் நடத்தப்படுதல். மற்ற நகரங்களில் அவர் அடிபட்டு, கல்லெறியப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, நகரத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். திடமான மனிதர்கள் கூட அநேக முறைகள் தவறாக நடத்தப்பட்டால், அது அவர்களை பாதிக்கத் துவங்கும்.*

## தேவனிடத்தில் தீர்வுகள் இருந்தன *(18:2-11)*

*பவுல், "பலவீனத்தோடும், பயத்தோடும், அதிக நடுக்கத் தோடும்" இருந்தபோது, தேவன் அவரைக் கைவிட்டு விட வில்லை. பின்னாளில் பவுல் கர்த்தரை, "... சகலவிதமான ஆறுதலின் தேவன் ... சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" (2 கொரி. 1:3, 4) என்று குறிப்பிட்டார். மற்ற நிகழ்ச்சிகளுடன், அநேகமாக அவர் தாம் கொரிந்துவில் வந்து சேர்ந்தபோது தேவன் எவ்விதம் அவருக்கு ஆறுதல் அளித்திருந்தார் என்பதை மனதில் வைத்திருந் திருப்பார். சூரிய வெளிச்சம் நமது ஆத்துமாக்களில் பொங்கிப்*

*பெருகும் போது தேவன் நம்முடன் இருப்பது மட்டுமின்றி, துயரத்தில் இருள் நமது இருதயங்களை நிரப்பும் பொழுதும் அவர் நம்முடன் இருக்கின்றார். நாம் கைவிடப்படும்போது, நம்பிக்கையிழந்து போகும்போது, தவறான எண்ணத்துடன் இருக்கும்போது தேவன் நம்மைக் கை விடுகிறதில்லை.*

*பவுலுக்குத் தேவன் செய்தது என்ன? நமது வேதவசனப் பகுதியின்படி, பவுல் தமது பயங்களை அமைதிப்படுத்துவதற்கு தேவையான எல்லாவற்றையும் தேவன் அருள் இரக்கத்துடன் அவருக்குத் தந்தார்.*

***நீடித்து நிற்கும் உறவுகள் (வ. 2, 3)***

*முதலாவது,தேவன் பவுலுக்கு நீடித்து நிற்கும் உறவுகளைக் கொடுத்தார். பயமானது நம்மை விழுங்குவதாகப் பயமுறுத்தும் போது நட்புறவு நம்மை பெலப்படுத்த முடியும்.*

> *யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கிலவுதியுராயன்[5] கட்டளையிட்டபடியினாலே, இத்தாலி யாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்து[6] தேசத்தானாகிய ஆக்கில்லா[7] என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும்[8] அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலை செய்து கொண்டு வந்தான்.*

*கி.பி. 49ஆம் ஆண்டுவாக்கில், யூதர்கள் ரோமாபுரியிலிருந்து, பேரரசின் தடை யுத்தரவினால் வெளியேற்றப்பட்டார்கள் என்று உலக எழுத்தாளர்கள் கூறுகின்றார்கள். பல கல்வி யாளர்கள் இந்த உண்மையை, சுடோனியஸ் என்பவரால் கூறப்பட்ட "யூதர்கள் கிறெஸ்துஸ் என்பவனுடைய தூண்டு தலினால் எதிர்த்துக் கலகம் செய்தபடியால்" வெளியேற்றப் பட்டார்கள் என்ற கிலவுதியுராயனுடைய கூற்றுடன் இணைக்கின்றார்கள். இது பெரும்பாலும், கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கத்தினால் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் உண்டான முரண்பாட்டைக் குறிப்பதாய் இருந்தது. கிறிஸ்தவத்தை யூதமார்க்கத்தின் ஒரு வடிவம் என்று ரோமாபுரி*

*கருதியதால், யூதர்களுடன் கிறிஸ்தவர்களும் கூட அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கலாம்.*

*பவுல் சந்தித்தபோது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் கிறிஸ்தவர்களாய் இருந்தார்களா இல்லையா என்பதை நாம் அறிவதில்லை. அவர்கள் கிறிஸ்தவர்களாய் இருந்தார்கள் என்று நம்புபவர்களும், அவர்கள் கிறிஸ்தவர்களாய் இல்லை என்று நம்புபவர்களும் லூக்காவின் அமைதியின் அடிப்படை யிலேயே தங்கள் கருத்தை கொண்டுள்ளார்கள்: "அவர்கள் கிறிஸ்தவர் களாயிருந்ததில்லை என்று சொன்னால், அவர்களின் மனமாற்றத்தைப் பற்றி லூக்கா ஏன் கூறவில்லை?; அவர்கள் கிறிஸ்தவர்களாயிருந்தால், ஆக்கில்லாவை ஒரு கிறிஸ்தவர் என்று கூறுவதற்குப் பதில் யூதர் என்று லூக்கா கூறுவது ஏன்?" பவுல் கொரிந்துவில் தமது தொடக்க நாட்களில் தாம் ஞானஸ்நானம் கொடுத்திருந்தவர்களின் பட்டியலில் (1 கொரி. 1:14-16) அவர்களைக் குறிப்பிடவில்லை என்ற உண்மையானது, பவுல் அவர்களைச் சந்தித்தபோது அவர்கள் கிறிஸ்தவர்களாய் இருந்தார்கள் என்ற வாதத்திற்கு ஆதரவாய் இருக்கக் கூடும்.[9]*

*பவுல் ஆக்கில்லாவைக் "கண்டார்" என்று வேதவசனப்பகுதி கூறுகின்றது; அது எப்படி நடந்தது என்று நாம் அறியவில்லை. ஒரே விதமான கூட்டுறவுக் குழுவை சேர்ந்த யூதர்கள், ஜெபஆலயத்தில் ஒன்றாய் அமருவார்கள், அங்கு பவு ல் ஆக்கில்லாவைச் சந்தித்திருக்கலாம் என்று யோசிக்கப் படுகின்றது. ஒருவேளை, தேவனுடைய அருளிரக்கத்தினால் பவுல், ஆக்கில்லா பிரிஸ்கில்லாள் ஆகியோரின் கடையில் வேலை கேட்டிருக்கலாம். எப்படியோ, அவர் அவர்களைச் சந்தித்தார், அவர்கள் ஆயுட்கால நண்பர்கள் ஆயினர். பின்னாளில் அவர் அவர்களைக் குறித்து இவ்வாறு எழுதினார்: "கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும்* (Prisca) *ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்த வர்கள்; அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கிறார்கள்" (ரோமர் 16:3, 4).*

***நீடித்து நிற்கும் வேலை ஒழுங்கு முறை (வ. 2-4)***

*பவுல் செய்வதற்கு ஊழியத்தை(வேலை)யும் தேவன் கொடுத்தார். நீங்கள் நம்பிக்கையிழந்து நிற்கையில் உங்களைச் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வது முக்கியமானதாகும். விடாப்பிடியாக ஒரு வேலை ஒழுங்குமுறையுடன் ஒட்டியிருப்பதென்பது பயத்தை நீர்த்துப் போகச் செய்ய முடியும்.*

*முதலாவது, தேவன் பவுலுக்கு உடல் உழைப்பைக் கொடுத்தார். "... அவர்களிடத்திற்குப் [ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாளிடத்திற்குப்] போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலை செய்து கொண்டு வந்தான்" (வ. 2ஆ, 3). பவுலின் தொழிலைக் குறித்து இவ்விடத்தில்தான் நாம் முதல் முறையாக வாசிக்கின்றோம். பவுல் ஒரு போதகராக(ரபீயாக)ப் பயிற்றுவிக்கப்பட்டிருந்தாலும், கூடாரம் செய்யும் தொழிலும் அவருக்குப் போதிக்கப்பட்டிருந்தது. பவுலின் சொந்த மாகாணமாகிய சிலிசியா. ஆட்டு உரோமத்தினால் செய்து ஈரத்தை எதிர்த்து நிற்கும் குணத்தினால் கூடாரத்திற்கு மிகச் சிறந்ததென்று கருதப்பட்ட ஒரு வகைத் துணியை உற்பத்தி செய்வதில் குறிப்பிடத் தக்கதாக விளங்கியதால், அவர் கூடாரம் செய்யும் தொழிலில் போதிக்கப்பட்டது இயல்பான ஒரு விஷயம் ஆகும். "கூடாரத் தொழில்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "தோல் தொழிலாளர்கள்" என்றும் அர்த்தம் தரும். துணி மற்றும் தோல் ஆகியவற்றில் மிகச் சிறந்த கைத் தொழில் கலைஞராகப் பவுல் விளங்கினார்.*

*பவுல் கொரிந்து நகருக்கு வந்து சேர்ந்த போது, நிதி ஆதாரத்திற்காக உடல் உழைப்பு அவசியமாயிற்று. ஆயினும், அவரது நிதிநிலைமைகள் மேம்பட்ட நேரத்திலும் கூட அவர் தமது கைகளினால் தொடர்ந்து உழைத்தார் (1 கொரி. 4:12), இதன்மூலம் "பணத்திற்காகப் பிரசங்கித்தார்" என்ற குற்றச் சாட்டை அவர் தவிர்க்க முயற்சி செய்தார் (1 கொரி. 9:11, 12).[10]*

*ஆக்கில்லா பிரிஸ்கில்லாளுடன் பவுல் வேலை செய்தது மட்டுமன்றி, அவர்களின் வீட்டிலேயே அவர் வசித்து வந்தார். ஒருவேளை அவர்கள், பின்புறம் வசிப்பிடத்துடன் கூடிய கடை ஒன்றை வைத்திருந்திருக்கலாம். அவர்களின் அந்த வசிப்பிட*

மானது கொரிந்துவில் இருந்த சபையார் கூடிவரும் இடமா கியிருந்திருக்க வாய்ப்புண்டு (ரோமர் 16:3-5; 1 கொரி. 16:19).

பவுல் தமது கைகளினால் வேலை செய்வதற்குரிய வாய்ப்பைக் கொடுத்த தேவன், அத்துடன் கூட சுவிசேஷத் தைப் பரப்புவதென்ற பவுலின் மாபெரும் ஊழியத்தை நிறைவேற்றவும் வாய்ப்பளித்தார். கொரிந்து போன்ற முக்கிய வர்த்தக நகரங்களில் யூதர்களின் குடியிருப்புகள் ஏராளமா யிருந்தபடியினால், பவுல் தமது ஊழியத்தைத் தொடங்கு வதற்கு ஏதுவாக ஒரு ஜெப ஆலயமும் அங்கு இருந்தது. இவ்விதமாக நாம், "ஓய்வுநாள்தோறும் அவன் ஜெப ஆலயத் திலே [வேதவாக்கியங்களின் நியாயங்களை 17:2] சம்பாஷணை பண்ணி யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொன்னான்" (18:4). ''கிரேக்கர்கள்'' என்பவர்கள் ''தேவபயமுள்ளவர்களாய்'' இருந்து, அதனாலே, அந்நகரின் தேவபக்தியற்ற தன்மையினால் வெறுப்பு உண்டாகி, சிறந்த விஷயம் எதையாவது தேடிக் கொண்டிருந்தார்கள். ஜெப ஆலயத்தில் பவுலின் பிரசங்கத்தில், ''கிறிஸ்து [மேசியா] பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்று ... [வேதவசனத்திலிருந்து] திருஷ்டாந்தப்படுத்தியது" தான் (அப். 17:3) அவரது தொடக்க வலியுறுத்தலாய் இருந்திருக்கும்.

கொரிந்து நகரின் சிதலங்களில் இருந்து பழைய ஜெப ஆலயத்தின் வாசற் கூரைக்கல் ஒன்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. ஒருவேளை இது பவுல் பிரசங்கித்த அதே ஜெப ஆலயமாக இருக்கலாம்.[11]

### பேரார்வமான ஒரு மறு பிணைப்பு (வ. 5-8)

உடல் ரீதியாகவும், ஆவிக்குரிய வகையிலும் பவுல் உழைத்துக் கொண்டிருக்கையில், அவரது உடன் ஊழியர்களின் வருகையினால் மேலும் அவருக்கு ஆறுதல் அளிக்கப்பட்டது. இரண்டு புதிய நண்பர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள் யாரேனும் இருப்பார்களென்றால், அவர்கள் இரண்டு பழைய நண்பர்களே யாவார்கள். "மக்கெதோனியாவிலிருந்து சீலாவும் தீமோத்தேயுவும் வந்தபோது" (வ. 5அ) என்று நாம் வாசிக்கின் றோம். அத்தேனேயில் விடப்பட்டபோது பவுல், ''சீலாவும் தீமோத்தேயுவும் அதி சீக்கிரமாய்த் தன்னிடத்திற்கு வரும்படி"

*(17:15) வார்த்தை சொல்லி அனுப்பியிருந்தார். 1 தெசலோனிக்கேயர் 3:1-5ல் தீமோத்தேயு அத்தேனே நகரில் பவுலுடன் சேர்ந்து கொண்டார் என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆனாலும் தெசலோனிக்கேயில் இருந்த கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்தி, உற்சாகப்படுத்தும்படி பவுல் அவரை அங்கே திரும்ப அனுப்பி விட்டார். ஒருவேளை சீலாவும் பவுலுடன் அத்தேனே பட்டணத்தில் சற்று நாள் சேர்ந்திருக்கலாம், பின்பு அவர் (சீலா) பிலிப்பி பட்டணத்திற்குத் திருப்பி அனுப்பி விடப்பட்டிருக்கலாம்.*[12]

*சீலாவும் தீமோத்தேயுவும் கொரிந்து நகருக்குத் திரும்பி வந்து சேர்ந்தது பவுலைப் பல வழிகளில் வலுவூட்டியது. அவர்கள் அங்கு இருந்ததே ஒரு ஆறுதலாய் இருந்திருக்கும். பவுல், சீலா மற்றும் தீமோத்தேயு ஆகியோர் ஒருவருக்கொருவர் தங்களைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொண்டு, சிரிப்புடன் பிரிஸ்கில்லாளின் சமையலறை மேசையைச் சுற்றிலும் வந்து ஆரவாரமிட்டுக் கொண்டிருந்ததை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. கூடுதலாகத் தீமோத்தேயு தெசலோனிக்கேயில் இருந்த சபையாரிடமிருந்து நல்ல செய்தியைக் கொண்டு வந்திருந்தார். பவுல் தெசலோனிக்கேயருக்கு, "இப்பொழுது தீமோத்தேயு உங்களிடத்திலிருந்து எங்களிடத்தில் வந்து, உங்கள் விசுவாசத்தையும் அன்பையும் குறித்தும், ... எங்களுக்கு நற்செய்தி சொன்னதினாலே, ... எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம்" (1 தெச. 3:6, 7). மேலும், சீலாவும் தீமோத்தேயுவும் பிலிப்பியில் இருந்த கிறிஸ்தவர்களிடமிருந்து பெரிதான ஒரு நிதிக் கொடையைக் கொண்டு வந்திருந்தார்கள்.*[13] *பின்னாளில் பவுல் கொரிந்தியர்களுக்கு, "... மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள் ..." (2 கொரி. 11:9) என்று எழுதினார். இந்தக் கொடையானது பவுல் தமது முழு நேரத்தையும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்ற தமது ஆதி அன்புக்கு ஒப்புக் கொடுக்க வழிவகுத்தது. ''மக்கெதோனியாவிலிருந்து சீலாவும் தீமோத்தேயுவும் வந்தபோது பவுல் ஆவியில் வைராக்கியங் கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்"*[14] *(வ. 5அ).*

சீலாவும் தீமோத்தேயுவும் வந்த நிகழ்ச்சியானது ஜெப ஆலயத்தில் பவுல் தமது பிரசங்கத்தில் தைரியமாய் இருக்கும்படி செய்தது. இதற்கு முன்பு அவர், மேசியா பாடுபட்டு, மரித்து, உயிர்த்தெழுந்திருக்க வேண்டும் என்று போதித்த வேதவசனங் களை வலியுறுத்திக் கொண்டிருந்தார். இப்பொழுதோ அவர் இந்தச் சிந்தனைக் கோட்டை அதன் முடிவுக்குக் கொண்டு சென்றார்: "இயேசுவே கிறிஸ்து [மேசியா] என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்" (வ. 5ஆ).[15]

இயேசுவே கிறிஸ்து என்று பவுல் அறிவித்தபோது, யூதர்கள் பகையுணர்வு கொண்டார்கள். அவர்கள் இயேசுவின் நாமத் தினாலே [அவரை] "எதிர்த்துநின்று தூஷித்த போது" (வ. 6அ). அவர்கள் இப்படிச் செய்தபோது, பவுல் "தன் வஸ்திரங்களை உதறி: உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல் இருக்கும்; நான் சுத்தமாயிருக்கிறேன்; இதுமுதல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறேன் என்று அவர்களுடனே சொல்லி,'' (வ. 6ஆ). பவுலின் செயல்களும், வார்த்தைகளும் பழைய ஏற்பாட்டின் அடையாளக் குறிகளில் வேர் கொண்டவைகளாய் இருந்தன. இதற்கு முன், பிசீதியாவின் அந்தியோகியாவில் இருந்த யூதர்களுக்கு எதிராகப் பவுலும் பர்னபாவும் தங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிச் சென்றார்கள் (13:50, 51); பவுல் தமது வஸ்திரங்களில் படிந்திருந்த தூசியை உதறிப் போட்டது அதே அடிப்படைச் செய்தியையே கொடுத்தது: "நீங்கள் தேவனால் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றீர்கள்; ஆகையால் நான் உங்களிடத்தில் இனிமேல் எதுவும் செய்வதற்கில்லை!"[16]

அவர்களின் இரத்தப்பழி அவர்கள் தலையின்மேல் இருக்கும், மற்றும் தாம் "சுத்தமாயிருப்பதாக" ப் பவுல் கூறிய இவ்வார்த்தைகள் நேரடியாக எசேக்கியேல் 3 மற்றும் 33ல் இருந்து வருகின்றது. தேவனுடைய செய்தியாளர் துன்மார்க்க மான மனிதரை எச்சரிக்கத் தவறினால், அம்மனிதர் தமது அக்கிரமத்திலே சாவார் - அவரது இரத்தப்பழியோ அவரை எச்சரிக்கத் தவறியவரிடத்திலே கேட்கப்படும் (எசே. 3:18; 33:8). இதற்குப் பதில், தேவனுடைய செய்தியாளர் துன்மார்க்கமான மனிதரை எச்சரித்திருந்தால்-அந்தத் துன்மார்க்க மனிதர் தமது வழியை மாற்றிக் கொண்டாலும், மாற்றிக் கொள்ளா விட்டாலும்-அந்தச் செய்தியாளர் தமது சொந்த ஆத்துமாவைத்

*தப்புவித்துக் கொள்ளுகின்றார் (எசே. 3:19; 33:9). எச்சரிக்கை யைக் கேட்டும் ஒருவர் அதைப் புறக்கணித்தால், "அவனுடைய இரத்தப் பழி அவன் தலையின்மேல் சுமரும்" (எசே. 33:4; மற்றும் யோசுவா 2:19ஐயும் காணவும்).*

*இதன் பின் பவுல் ஜெப ஆலயத்தை விட்டுச் சென்றார்; ஆனால் அவர் தூரமாய்ச் சென்று விடவில்லை, ஏனென்றால் தேவனுக்குப் பயந்திருந்தவர் ஒருவர் தமது வீட்டை அவர் பயன்படுத்தக் கொடுத்தார், அவ்வீடு ஜெப ஆலயத்திற்கு அடுத் திருந்தது. பவுல், "அவ்விடத்தை விட்டு, தேவனை வணங்குகிற வனாகிய யுஸ்து என்னும் பேருள்ள ஒருவனுடைய வீட்டிற்கு வந்தான்; அவன் வீடு ஜெப ஆலயத்திற்கு அடுத்ததாயிருந்தது" (வ. 7).[17] சிலர் இந்த டைட்டியஸ் யுஸ்து என்பவர், பவுலின் சொந்தக் கைகளினால் ஞானஸ்நானம் பெற்றவரும் (1 கொரி. 1:15), பவுல் கொரிந்து நகருக்குப் பின்னொரு முறை வந்தபோது, அவரை உபசரித்தவருமான (ரோமர் 16:23) காயு என்பவராயிருக்கலாம் என்று எண்ணுகின்றார்கள்.*

*யூத ஜெப ஆலயத்தின் அருகிலேயே கிறிஸ்தவர்கள் கூடுமிடம் ஒன்று தெய்வீக அருளிரக்கத்தினால் கொடுக்கப் பட்டிருப்பதைக் காணாமல் இருக்க முடியாது. பவுலின் பிரசங்கத்தைக் கேட்க விரும்புவர்கள், தங்கள் ஓய்வு நாள் வழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை; யூத ஜெப ஆலயத்திற்குள் நுழைவதற்குப் பதிலாக அவர்கள் பக்கத்து கட்டிடத்தின் வாசலுக்குள் நுழைந்தார்கள். இரதங்கள் எல்லாம் பக்கத்து வாசலுக்கு எதிரே நிறுத்தப்பட்டிருப்பதைக் காணும் போது யூதர்கள் விசனமடைந்ததுமல்லாமல், அவர்கள் ஆகமங் களை வாசிக்கப் பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கும் போது டைட்டியஸின் வீட்டிலிருந்து கிறிஸ்தவர்கள் இயேசுவைத் துதித்துப் பாடுவது நிச்சயமாகவே அவர்களை ஆவேசத்தினால் நிரப்பின.*

### மகிழ்விக்கும் விளைவுகள்

*அத்தேனேயில் விளைவுகள் அரிதாகவே இருந்தன, ஆனால் கொரிந்துவில் பதில்செயல்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தன. (அறிவுள்ளவர்களைக் காட்டிலும் ஒழுக்கமற்றவர் களிடத்தில் சிறந்த எதிர்பார்ப்புக் கிடைக்கும் என்று இது*

சுட்டிக் காட்டுகின்றதா?) பின்னாளில் கர்த்தர், தமக்கு கொரிந்துவில் "அநேக ஜனங்கள்" இருக்கிறார்கள் (18:10) பவுல் அவர்களுக்குப் போதித்தால் அவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவார்கள் என்பதாகக் கூறினார். வசனம் 8ல் அறுவடையின் தொடக்கம் பற்றிக் கூறப்படுகின்றது. முதலாவதாக மனம் மாறியதாகக் குறிப்பிடப்பட்டவர் நம்மைத் திகைக்கச் செய்கின்றார்: "ஜெப ஆலயத் தலைவனாகிய[18] கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான்"[19] (வ. 8அ). கிறிஸ்தவராவதற்குக் கிறிஸ்பு என்ன கிரயம் (விலை) கொடுக்க வேண்டியிருந்தது என்பதை என்னால் கற்பனை செய்ய முடியவில்லை, ஆனால் உங்களில் சிலரால் அது முடியும் - ஏனென்றால், நீங்களும் அது போன்ற ஆவிக்குரிய நிலையில் பெரும் மாற்றத்தை மேற்கொண்டிருக்கின்றீர்கள்! பவுல் அடுத்திருந்த வீட்டிற்குச் சென்றது யூதர்களை அதிரச் செய்திருந்தால், ஜெப ஆலயத் தலைவன் கட்சி மாறியது அவர்களை முற்றிலுமாகச் சீரழித்திருக்க வேண்டும்.

இதைக் கடந்து செல்லுகையில், "கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான்" என்ற சொற்றொடரானது மீண்டும் ஒரு முறை இங்கு, கிறிஸ்தவராவதற்கு அவர் செய்த செயல்கள் எல்லாவற்றையும் தொகுத்துக் கூறுவதற்குப் பயன்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும். பவுல் 1 கொரிந்தியர் 1:14ல் கிறிஸ்பு ஞானஸ்நானம் பெற்றதாக கூறினார் (உண்மையில், அவர் தமது சொந்தக் கைகளினாலே கிறிஸ்புவுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருந்தார்).

கிறிஸ்புவின் மனமாற்றத்தைப் பற்றிக் கூறிய பிறகு, லூக்கா, கொரிந்து நகரில் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டு பதில்செயல் செய்தவர்களைப் பற்றிக் கருத்துச் செறிவுள்ள கூற்று ஒன்றைக் கொடுத்தார்: "கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு,[20] விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்" (வ. 8ஆ). நடபடிகள் புத்தகத்தில் மற்ற எல்லாரும் இரட்சிக்கப்பட்ட அதே விதமாகத்தான் கொரிந்தியரும் இரட்சிக்கப்பட்டார்கள். "அநேகரில்" என்பதில், பவுல் பின்னாளில் "அகாயா நாட்டிலே முதற் பலனானவர்கள்" (1 கொரி. 16:15; 1 கொரி. 1:16ஐயும் காணவும்) என்று குறிப்பிட்டிருந்த ஸ்தேவானும் அவருடைய

வீட்டாரும் உள்ளடங்கியிருக்கலாம்.[21]

**ஊக்கமளித்துப் பயம் நீக்குதல் (வ. 9-11)**

கொரிந்துவில் பவுலின் தொடக்க கால ஊழியத்தில் வெற்றிக்கு மேல் வெற்றி தொடர்ந்ததாகத் தோன்றியதென்று நான் மீண்டும் ஒருமுறை கூறுகின்றேன். ஆயினும், வசனங்கள் 9 மற்றும் 10 ஆகியவை, அப்பொழுதும் பவுல் எதிர்மறை உணர்வுகளுடன் போராடிக் கொண்டிருந்ததாக நமக்குத் தகவல் தருகின்றன. இதற்குப் பங்களிக்கும் காரணிகள் பல இருந்திருக்கலாம்: கொரிந்து பட்டணத்தில் இருந்த வல்லமை நிறைந்த சோதனைகள், மனம் மாறியவர்களை மறுபடியும் இழுத்து விடுமோ என்று அவர் கவலைப்பட்டிருக்கலாம். செல்வாக்குள்ள மக்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கையில் அவர்களின் ஆணவ (ego) உணர்வுகளை கையாளுவது என்பது களைப்படையச் செய்திருக்கலாம். அவர் கொரிந்து நகருக்கு வருவதற்கு முன்பே உணர்வு ரீதியாக அவர் வெறுமையடைந் திருந்ததால் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுவதற்கு (புதுப்பிக்கப் படுவதற்கு) நீண்ட காலம் ஆகியிருக்கலாம். வசனம் 10ல் இருந்து நிச்சயமான ஒரு காரணியை நாம் பெற முடியும்: யூதர்களிடமிருந்து அவருக்குத் தவிர்க்க முடியாத அளவில் தீங்குகள் வருமோ என்று அவர் பயந்திருந்தார்.

ஆகையால் பவுல் தமது பயத்தை மேற்கொள்ள உதவுவதற்கு தேவன், கடைசி ஆசீர்வாதம் ஒன்றைக் கொடுத் தார்: இயேசுவிடமிருந்து ஒரு விசேஷ தரிசனமும் செய்தியும் அவருக்குக் கிடைத்தது. தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில், இயேசு தாம் அவ்வப்போது மறுபடியும் பவுலுக்குத் தரிசன மாகப் போவதாக அவரிடத்தில் வாக்குத்தத்தம் செய்திருந்தார் (26:16). அந்த விசேஷித்த தரிசனங்களில் இதுவும் ஒன்றாகும்.[22]

> இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனே கூட இருக்கிறேன்,[23] உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார் (18:9, 10).

*பவுல் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றினால் அமிழ்த்தப்பட்டிருக்கலாம் என்று நான் ஏற்கனவே கருத்துத் தெரிவித்திருந்தேன்; அந்த அப்போஸ் தலருக்குத் தரிசனம் தருகையில் இயேசு இம்மூன்றையும் குறிப்பிட்டார்: அவர் கடந்த காலத்தை நீக்கிப் போட்டார்: "பயப்படாதே." அவர் நிகழ்காலத்திற்கு உறுதியளித்தார்: "பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனே கூட இருக்கிறேன்." அவர் எதிர்காலத்தைப் பற்றி மதிப்பு மிகும் ஒரு வாக்குத்தத்தம் கொடுத்தார்: "உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு."*

*இந்த வாக்குத்தத்தம் மற்றும் இதன் நிறைவேற்றம் பற்றி நாம் இன்னும் அதிக விபரமாய் அடுத்த பாடத்தில் படிப்போம். இருப்பினும், பரலோகத்தின் இப்பரம தரிசனமானது பவுலிடத்தில் புதிய நம்பிக்கையை நிரப்பிற்று என்று மட்டும் ஒரு எளிய குறிப்பை இங்கு தருகின்றேன். அவர் தமது சுவிசேஷப் பிரயாணங்கள் அனைத்திலும் இரண்டாவதாக அதிக காலம் அதாவது ஒன்றரை ஆண்டு காலம் தங்கியிருந்து ஊழியம் செய்த நகரம் கொரிந்துவே ஆகும்.[24] "அவன் ஒரு வருஷமும் ஆறு மாதமும் அங்கே தங்கி, தேவ வசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம் பண்ணிக் கொண்டு வந்தான்" (வ. 11). இக்காலகட்டத்தில்தான் பவுல், 1 மற்றும் 2 தெசலோனிக்கேயர் நிருபங்களை எழுதினார்.[25]*

## முடிவுரை

*கொரிந்துவில் பவுலின் தொடக்க கால ஊழியத்திலிருந்து பல பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும்: (1) தேவனுடைய மிகச் சிறந்த ஊழியர்கள் கூட சில நேரங்களில் பயமடைந் திருக்கின்றனர். பவுலும் அப்படித்தான் இருந்தார். நமது பயங்களை ஒப்புக்கொள்ள நாம் வெட்கப்படக் கூடாது. (2) பயமானது நமது இருதயங்களை நிரப்பும்போது, தேவன் நம்மைக் கைவிடுவதில்லை. மாறாக, அவர் நம்மோடு தங்கி, நமக்கு உதவுகின்றார்! அவர் பவுலுக்கு உதவின அதே வழிகளில் நமக்கும் உதவுகின்றார்: நமக்கு ஆறுதல் தர அவர் நண்பர்*

*களைக் கொடுக்கின்றார், நம்மை மறுபடியும் வலிமையூட்டக் கிரியை செய்கின்றார், நமக்கு அறைகூவல் விடுக்கும் வாய்ப்புகள் தருகின்றார், மற்றும் நம்மைத் தாங்கி நிற்பதாக வாக்குத்தத்தம் செய்கின்றார் (ரோமர் 8:28). இயேசு "நான் உன்னுடன் இருக்கிறேன்" என்று பவுலுக்குத் கூறினார்; அவர் "சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத். 28:20) என்று நமக்கும் கூறுகின்றார். (3) நாம் பயப்பட்டாலும் கூட, தேவனை நாம் விட்டுவிடாதிருந்தால், அவர் நம்மை ஆசீர்வதிப்பார். அவர் பவுலை ஆசீர்வதித்தார், அவர் நம்மையும் ஆசீர்வதிப்பார் (2 தீமோ. 4:17, 18)!*

## *பிரசங்கக் குறிப்புகள்*

*இந்தப் பிரசங்கத்தின் தொடர்பாகவோ அல்லது அப்பொல்லோவுடனான (18:24-28) பிரசங்கத்தின் தொடர்பாகவோ, ஒரு விசேஷித்த துணைப்பாடத்தில் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் சித்தரிக்கப்படக் கூடும். பிரிஸ்கில்லாளின் பெயரானது ஆக்கில்லாவின் பெயருக்கு முன்னதாக அடிக்கடி கொடுக்கப்படுவதைக் கவனியுங்கள். இது, அவள் வெறுமனே ஆக்கில்லாவின் இணையாக மட்டுமின்றி, அவருடனே கூட அவளும் ஊழியம் செய்ததைக் குறிப்பிடலாம். தனிச்சிறப்புள்ள இந்தத் தம்பதியைப் பற்றிய மற்ற விபரங்கள் ரோமர் 16:3-5; 1 கொரி. 16:19; மற்றும் 2 தீமோ. 4:19 ஆகிய வசனங்களில் காண முடியும்.*

*அப். 18:9, 10ல் பவுலுக்கு இயேசுவின் வார்த்தைகள் பற்றிய கருத்துப்பாடம் ஒன்றைப் பவுல் ரோஜர்ஸ் பயன்படுத்தினார்: (1) "பயப்படாதே" (பயத்தைப் பற்றிப் பொதுவாகப் பேசுங்கள்), (2) "பேசு, மவுனமாயிராதே" (மற்றவர்களுக்கு இயேசுவைப் பற்றிக் கூறும் தேவையை வலியுறுத்துங்கள்) (3) "நான் உன்னுடனே கூட இருக்கின்றேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை; ..." (நம்முடன் இருந்து நம்மைப் பாதுகாக்கும் இயேசுவின் வாக்குத்தத்தம் பற்றிப் பேசுங்கள் [மத். 28:20; 2 தெச. 3:3; முதலியவை.]).* ("No Time To Be Afraid", *"பயப்படுவதற்கு நேரமில்லை", The Preachers Periodical,* May 1985.)

குறிப்புகள்

[1]இவ்விதழில் உள்ள வரைபடத்தைக் காணவும். குறிப்பு: பவுல் கடல் வழியில் சென்றாரா அல்லது நிலவழியில் சென்றாரா என்று நாம் அறியவில்லை. இரண்டு வழிகளும் சேரக் கூடியவைகளே. [2]இதற்கு முன் பவுல் எழுதி, பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள ஒரே நிருபம் கலாத்தியர் நிருபம் ஆகும். [3]இவ்விதழில் உள்ள வரைபடத்தைக் காணவும். இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை கொரிந்து நகரில், பொசியன் என்ற புராணக் கடவுளுக்கு மரியாதை செய்யும் வகையில் “Isthmian Games” என்ற விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன. Isthmian Games என்பவை அத்தேனே நகரில் நடத்தப்பட்ட ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு அடுத்தவையாகும். ஆகையால் கொரிந்தியருக்கு எழுதுகையில் பவுல், பந்தய சாலையின் விளக்கத்தைப் பயன்படுத்தினார் (1 கொரி. 9:24-27). [4]இந்த நில இடுக்கின் குறுக்காக ஒரு செயற்கைக் கால்வாயானது நீரோவின் நாட்களில் பணி தொடங்கப் பெற்று, 1893ல் பணி நிறைவு பெற்றது. இந்நாட்களிலும் இக்கால்வாயின் வழியே சிறு கப்பல்கள் கடந்து செல்லுகின்றன. [5]இதற்கு முன்பு 11:28ல் கிலவுதியு இராயனுடைய பெயர் குறிப்பிடப்பட்டது. பேரரசர் என்ற வகையில் கிலவுதியு ராயனுடைய பெயர் மட்டும் தான் புதிய ஏற்பாட்டில் இருமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. [6]ஆசியா மைனரின் வடபகுதியில் இருந்த பொந்து தேசம் என்பது ஒரு ரோமானிய மாகாணம் ஆகும். பெந்தெகொஸ்தே நாளில் யூதர்கள் பொந்துவிலிருந்து வந்திருந்தார்கள் (அப். 2:9). பின்னாளில் சபை அங்கு ஸ்தாபிக்கப் பட்டிருந்தது (1 பேது. 1:1). [7]“ஆக்கில்லா” என்பது “கழுகு” (Eagle) என்று அர்த்தப்படும் ஒரு ரோமப் பெயராகும். [8]ஆக்கில்லா மட்டுமே குறிப்பாக ‘‘ஒரு யூதன்’’ என்று அழைக்கப்படுவதால், பிரிஸ்கில்லாள் ஒரு புறஜாதிப் பெண்ணாயிருக்கலாம் என்று சிலர் யூகிக்கின்றார்கள்; ஆனால் அவளும் அநேகமாக ஒரு யூதப்பெண்ணாகவே இருந்திருக்கலாம். [9]விஷயம் இப்படியிருந்தால், ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ஏன் ரோமாபுரியிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள் என்பதற்கு விளக்கம் அளிக்கவே லூக்கா, ஆக்கில்லாவை ஒரு யூதர் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். [10]பவுல் எங்கிருந்தாலும் தாம் பிரசங்கிக்கும் மக்களிடமிருந்து எதையும் பெறாமல் தமக்குத்தாமே உதவி செய்து கொள்வதே அவரது வழக்கமாய் இருந்தது (அப். 20:34; 1 கொரி. 9:1-18; 2 கொரி. 11:7-9; பிலி. 4:15-17; 1 தெச. 2:9; 4:11; 2 தெச. 3:8). இருப்பினும், இனி நாம் பார்க்கப் போகிறபடி, மற்ற சபைகளில் இருந்தும் அவர் உதவியைப் பெற்றுக் கொண்டார். மற்றும், பவுல் ஒரு பிரசங்கியார் தாம் பிரசங்கிக்கும் மக்களால் (கிறிஸ்தவர்களால்) உதவி செய்யப்படும் உரிமையுள்ளவர் என்றும் பவுல் வலியுறுத்தினார் (1 கொரி. 9:1-18). பாடத்தில் குறிப்பிட்டபடி, விமர்சனத்தைத் தவிர்ப்பதற்காகப் பவுல் இந்த உரிமையை விட்டுக் கொடுத்தார், ஆனால் அவரது விரோதிகள் அவரது இந்த வழக்கத்தை அவரை விமர்சனம் செய்யப் பயன்படுத்திக் கொண்டார்கள் (2 கொரி. 11:7-9). ஒருவேளை அவர் தகுதியற்றவராயிருந்ததால் ஊதியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அவர்கள் ஆலோசனை தெரிவித்தார்கள்! விமர்சனம் செய்யும்படியாக நாம் நடந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும், ஆனால் குற்றம் காண வேண்டுமென்று மக்கள் தீர்மானித்தால், நம்மை

விமர்சிப்பதற்கு எதையாகிலும் அவர்கள் கண்டு பிடிப்பார்கள்.

[11]அக்கல்லின் மேல் சீரமைக்கப்பட்ட செதுக்கெழுத்துக்கள் “எபிரெயர்களின் ஜெப ஆலயம்” என்றுள்ளது. அது கி.மு. 100 முதல் கி.பி. 200 வரையிலும் பல்வேறு விதமாய்க் காலக் கணக்கிடப்பட்டுள்ளது. லெகயீமுக்குச் செல்லும் சாலைக்கு அருகில் இக்கல் கண்டெடுக்கப்பட்டது. [12]சீலாவும் தீமோத்தேயுவும் பிலிப்பி நகரத்துச் சபையிலிருந்து பங்களிப்புத் தொகை கொண்டு வந்திருக்கலாம் என்ற உண்மையின் அடிப்படையிலேயே இந்தச் சாத்தியக் கூறு அமைந்துள்ளது (இவ்வேத வசனப் பகுதிக்கான பின்பகுதிக் குறிப்புகளைக் காணவும்). தீமோத்தேயு தெசலோனிக்கேயிலிருந்து வந்தால் சீலா பிலிப்பியிலிருந்து வந்தார் என்பது ஏற்புடைய தாகக் காணப்படுகின்றது - பவுல் தீமோத்தேயுவை தெசலோனிக்கே நகருக்கு அனுப்பியது போலவே இவரை அங்கு அனுப்பி சகோதரர்களை நலம் விசாரித்து வரச் செய்திருக்கலாம். [13]பவுல் மக்கெதோனியாவை விட்டுச் சென்றபோது (பிலி. 4:15, 16) பிலிப்பியில் இருந்த கிறிஸ்தவர்கள் மட்டுமே அவருக்கு உதவி செய்திருந்ததாலும், சீலாவும் தீமோத்தேயுவும் மக்கெதோனியாவில் இருந்து (2 கொரி. 11:9) பணம் கொண்டு வந்ததாலும், அவ்வுதவி பிலிப்பி பட்டணத்திலிருந்து தான் வந்திருக்க வேண்டும். [14]மூல வசனப்பிரதியில், Was pressed by [or “to” or “in”] the word” என்ற நேரடி அர்த்தம் உள்ளது (KJVயில் pressed in the spirit” என்றுள்ளது). இது தேவனுடைய வசனமானது (எரேமியாவின் எலும்புக்குள் அக்கினியாய் இருந்தது போல) பவுலையும் தைரியமாய் இருக்கும்படி திடப்படுத்தியதென்றோ அல்லது பவுல், வசனத்தை மிகுந்த தைரியத்தோடு தன்னிடம் கேட்டவர்களிடம் வலியுறுத்தினார் என்றோ அர்த்தப்பட முடியும். மக்கெதோனியாவிலிருந்து வந்த கொடையானது- அவர் தமது கைகளினால் வேலை செய்ய வேண்டிய அவசியம் (குறைந்தது சிலகாலமாவது) இனி நேராது என்பதால்-பவுல் தமது பிரசங்கத்தை இன்னும் அதிக வலுவுடனும் உறுதியுடனும் கூறச் செய்தது என்று பல மொழி பெயர்ப்பாளர்களும், விளக்கவுரையாளர்களும் கருதுகின்றார்கள். NIVயில் devoted himself exclusively to preaching” என்றுள்ளது. (NEB மற்றும் TEV ஆகியவற்றையும் காணவும்). [15]கொரிந்துவில் பவுலின் அடிப்படைச் செய்திக்காக விரிவாக்கத்தை 1 கொரி. 1:18-25; 2:2; 15:1-8 ஆகிய வசனங்களில் காணவும். [16]“அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3” இதழில் 13:50, 51க்கான குறிப்புகளைக் காணவும். இதே போன்ற ஒரு எடுத்துக்காட்டைப் பழைய ஏற்பாட்டில் நெகேமியா 5:13ல் கூடக் காணலாம். [17]டைட்டியஸ் யுஸ்துவுடன் வசிக்க, பவுல் ஆக்கில்லா-பிரிஸ்கில்லாளின் வீட்டை விட்டு வந்து விட்டார் என்று இதற்கு அர்த்தமல்ல. இயேசுவைப் பற்றி அதிகமாய்க் கற்றுக் கொள்ள விரும்புபவர்களுக்குப் பிரசங்கிக்க யுஸ்துவின் வீடு ஒரு இடமாகப் பயன்படுத்தப்பட்டது. [18]ஜெப ஆலயத் தலைவரே அங்கு வசதிகள் மற்றும் ஆராதனைகள் ஆகியவற்றிற்குப் பொறுப்பாய் இருந்தார் (13:15) கொரிந்துவில் இருந்த ஜெப ஆலயத்தில் (13:15ல் போல) ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்கள் இருந்திருக்க வாய்ப்பு உண்டு; கிறிஸ்பு அவர்களில் ஒருவராகவும், சொஸ்தனே இன்னொருவராகவும் இருந்திருக்கக் கூடும். [19]“வீட்டார் அனைவரின் மனமாற்றம்” என்று இவ்விடத்தில் நாம் மூன்றாவது முறையாக நடபடிகள் நூலில் படிக்கின்றோம். இது தொடர்பான குறிப்புகளை

*"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3"ல் 16:15க்கான குறிப்புகளில் காணவும்.* [20]*இரட்சிப்புக்கான தேவனுடைய நிபந்தனைகளில், சுவிசேஷத்தைக் கேள்விப்படுதல் மிக முக்கியமான பாகமாய் இருக்கின்றது (ரோமர் 10:17).*

[21]*இவ்விதழில் 17:34க்கான குறிப்புகளைக் காணவும். ஸ்தேவானும் அவருடைய வீட்டாரும் அத்தேனேயில் அல்ல கொரிந்துவிலேயே ஞானஸ் நானப் படுத்தப்பட்டிருக்கலாம் என்பது எனது கருத்தாக இருக்கின்றது. "அகாயா நாட்டிலே முதற் பலனானவர்கள்" என்ற சொற்றொடரானது "கொரிந்துவைப் பொறுத்தமட்டில்" என்ற தகுதிப்படுத்தும் சொற்றொட ரால் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.* [22]*பவுலுக்கு இயேசு கொடுத்ததாகப் பதிவாகியுள்ள மற்ற தரிசனங்கள் அப். 9:1-6; 22:17, 18; 23:11; 27:23-25; 2 தீமோ. 4:16, 17 ஆகிய வசனப் பகுதிகளில் காணப்படுகின்றன.* [23]*ஏசாயா 43:5ஐக் காணவும்.* [24]*எபேசுவில் அவர் அதிக நாட்கள் தங்கியிருந்தார் (19:10).* [25]*தீமோத்தேயு கொரிந்துவுக்குப் பவுலினிடத்தில் அறிக்கை கொண்டு வந்த பிறகு சற்று நாட்களில் தெசலோனிக்கேயருக்கு முதல் நிருபம் எழுதப் பட்டது (1 தெச. 3:6). பிறகு தீமோத்தேயு அந்த நிருபத்துடன் தெசலோனிக்கே நகருக்கு அனுப்பப்பட்டார். அவர் திரும்பி வந்த போது, பவுல் ஒரு பின் தொடர்ச்சிக் கடிதம் எழுதினார். இந்த இரண்டாவது கடிதமும் கொரிந்துவில் இருந்துதான் எழுதப்பட்டது என்பது பெரும்பாலும் உறுதியானது (2 தெசலோனிக்கேயர் நிருபத்தின் முதல் வசனத்தில் சீலா* [*சில்வான்*] *குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்; நடபடிகள் புத்தகத்தில், கொரிந்துவில்தான் சீலாவின் பெயர் கடைசியாகக் காணப் படுகின்றது* [*அப். 18:5*].

## விக்கிரகாராதனை - அப்பொழுதும், இப்பொழுதும்

*அத்தேனேயின் விக்கிரகாராதனையினால் பவுல் ஆவியிலே "வைராக்கியம் அடைந்தார்." யாத்திராகமம் 20:4, 5; ஏசாயா 44:9-20; எரேமியா 10:3-5 போன்ற பழைய ஏற்பாட்டு வசனங்களினால் அவர் எழுப்பப்பட்டார். புதிய ஏற்பாடும் கூட விக்கிரகாராதனையைக் கண்டனம் செய்கின்றது (1 கொரி. 10:4; முதலியன). மதத்தில் சொரூப வணக்கத்தை உற்சாகப் படுத்துகின்றவர்கள், அவர்கள் செய்யும் வழிபாடானது விக்கிரகாராதனை செய்வோரின் வழிபாட்டில் இருந்து வேறுபட்டது என்று கூறுகின்றார்கள். அவர்கள், "நாங்கள் அந்த சொரூபத்தையே வணங்குவதில்லை, ஆனால் அது பிரதிநிதித்துவப் படுத்துபவரையே" வணங்குகிறோம் என்கின்றார்கள். ஆயினும் முதல் நூற்றாண்டின் விக்கிரகாராதனைக்கும், இன்றைய நாட்களின் விக்கிரகாராதனைக்கும் சிறிதளவே வேறுபாடு உண்டு. முதல் நூற்றாண்டில் விக்கிரகாராதனை செய்வதில் விழிப்புணர்வு பெற்றிருந்தார்கள். தாங்கள் வணங்கிய விக்கிரகம் தாங்கள் கனப்படுத்த விரும்பும் தேவதையை பிரதிநிதித்துவப் படுத்தியதாக நம்பினார்கள், அறியாமையுள்ள புறஜாதி விக்கிரகாராதனைக்காரர்களோ விக்கிரகத்தையே ஆராதித்தார்கள். அது போலவே, இன்றைய நாட்களிலும் கூட, விழிப்புணர்வு பெற்றவர்கள் வேண்டுமானால், ஒரு சொரூபமானது இயேசுவை (அல்லது மரியாளை அல்லது ஒரு புனிதரை) பிரிதிநிதித்துவப் படுத்த மட்டுமே செய்கிறது என்று கூறலாம், அதே வேளையில், அறியாமையுள்ள மற்றும் மூடநம்பிக்கை யுள்ளவர்கள் தங்கள் ஈடுபாட்டை அந்த சொரூபத்தின் மேலேயே செலுத்துகின்றார்கள். "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்வீர்களாக" (1 யோவா. 5:21).*